**சார்பு நீதிமன்றம், காங்கயம்.**

OS.No. 05/2020
PW – 1 - சாதனா
தேதி : 20.11.2025

**சாட்சி ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. குடும்ப ஏற்பாட்டு திருமணம் என்றால் சரிதான். இருவரும் கணவர் வீட்டில் 7 வருடம் குடும்பம் நடத்தினோம் என்றால் சரிதான். 2011 ல் 1ம் வாதி பிறந்தார் என்றால் சரிதான். திருமணமான 6 மாதத்தில் கணவர் மது போதைக்கு அடிமையாகிவிட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. பணம், நகை வாங்கி வர சொல்லி கணவர் என்னை அடித்து துன்புறுத்தியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. இது குறித்து காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. 7 வருட காலம் எங்களுக்குள் பிரச்சனை ஏதும் இன்றி நன்றாக வாழ்ந்தோம் என்றால் சரிதான். அடித்து துன்புறுத்தியதாகவும் பின்பு சமரசம் பேசி அழைத்து வந்து வாழ்ந்ததாகவும் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. 2016 ல் கணவர் என்னை அடித்து வீட்டை விட்டு துறத்திவிட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

2. 12.07.2017 ல் மது போதையில் கணவர் என்னை வெள்ளகோவில் பதிவு அலுவலகத்திற்கு அழைத்து சென்று ஆவணம் பதிவு செய்து கொண்டதாக சொல்வதை காட்டும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது போன்ற சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்பதால் தான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மகளின் படிப்பிற்கு வருடம் ரூ.45000/– செலவாவதாக சொல்லியுள்ளதை காட்டும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கோ குழந்தைக்கோ உடல் நல பிரச்சனை எதுவும் இல்லை என்றால் சரிதான். மருத்துவ செலவினத்திற்கு மாதம் ரூ.5000/– தேவை என சொல்வது தவறாது என்றால் சரியல்ல.

3. வழக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் கணவருக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்டது. சொத்தை பொறுத்து கணவரின் குடும்பத்திற்குள் ஆவணம் ஏற்பட்டுள்ளதா என்றால் பாகப்பிரிவினை பத்திரம் ஏற்பட்டுள்ளது. வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1.93 ஏக்கர். மங்களப்பட்டி கிராமத்தில் உள்ளது சொத்தின் புல எண் தெரியாது. வழக்கு சொத்தை தவிர கணவருக்கு வேறு சொத்து எதுவும் இல்லை என்றால் வேறு சொத்துக்களை விற்பனை செய்துவிட்டார், மாமியார் பெயரில் சொத்து உள்ளது. கணவரால் விற்கப்பட்டதாக சொல்லும் சொத்தின் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது போல் விற்பனை செய்யவில்லை என்பதால் தான் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து மானாவரி பூமி, கிணறு இல்லை என்றால் சரியல்ல கிணறு உள்ளது. வழக்கு சொத்து விவரத்தில் கிணறு உள்ளதாக குறிப்பு இல்லை என்றால் சரிதான். கிணறு உள்ளதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

4. எனக்கு 32 வயதாகிறது. கணவருக்கு 45 இருக்கலாம். என்னை விட 10 வயது மூத்தவர் என்பதால் கணவரை அவமானப்படுத்தி வந்துள்ளேன் என்றால் சரியல்ல. இதை காரணம் காட்டி கணவருடன் அடிக்கடி சண்டை செய்துகொண்டு பெற்றோர் வீட்டிற்கு சென்று விடுவேன் என்றும், சமாதானம் பேசி அழைத்து வருவார் என்றும் சொன்னால் சரியல்ல. திருமணத்திற்கு பின்னட்டு கையில் ஒவ்வாமை ஏற்பட்டு கோவை, கேரளா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் சரியல்ல. பல இலட்சம் சிகிச்சைக்கு செலவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாகனத்தில் சென்றபோது ஆடு குறுக்கே வந்து விபத்து ஏற்பட்டதில் கணவரின் கால் உடைந்துள்ளது என்றால் அது போன்ற விபத்தே நடைபெறவில்லை. எப்போதிலிருந்து பிரிந்தோம் என்றால் 2017. அதற்கு பின்னிட்டு கணவருக்கு விபத்து ஏற்பட்டிருந்தால் அது எனக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரிதான். பிரிந்த பின்னிட்டு விபத்து ஏற்பட்டு வெளியில் செல்ல முடியாத நிலையில் இருந்துள்ளார் என்றால் சரியல்ல.

5. காயங்கள் குணமான பிறகு 2019 ல் சேர்ந்து வாழ்வதற்கு என்னை அழைத்தார் என்றால் சரியல்ல. விவாகரத்து கேட்டு நானோ, கணவரோ சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். சேர்ந்து வாழ்வதற்கும் இருவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். கடந்த 13.07.2020 ம் தேதியில் இலக்குமநாயக்கன்பட்டி, காட்டுரை சேர்ந்த பழனிச்சாமி மகன் செல்வகுமார் என்பவரை திருமணம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2 வது திருமணம் செய்து கொண்டதால் ஜீவனாம்சம் கோருவதற்கு எனக்கு தகுதி இல்லை என்றால் சரியல்ல. மகள் சார்பாக நான் சொத்தை அனுபவித்துள்ளேனா என்றால் அனுபவித்துள்ளேன். கணவரை விட்டு பிரிந்த பிறகு சொத்தை அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. அனுபவத்தில் இல்லை என்பதால் தான் புல எண், விஸ்தீரணம், அமைப்பு எதுவும் தெரியவில்லை என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S SANTHANA KRISNASAMY
Digitally signed by S SANTHANA KRISNASAMY
Date: 2025.11.20 18:29:55 +0530

சார்பு நீதிபதி,
காங்கயம்.